புதுமலர்: 07 இதழ்: 06

கார்த்திகை - மார்கழி

# அனல்

இணை ஆசிரியர்கள்
* யோ.நிக்ஷன்
* வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.11.2010

## பொருளடக்கம்


* அனலின் குரல்
* கடந்தது கடக்கட்டும் - கவிதை
* கதையும் கற்றதும் - எது தேவை?
* வினா விடை - 42
* எல்ரோயி என்னைக் காண்கிற தேவன்
* வாலிபர் வளாகம் - வாலிபமும் மறையுதே?
* குறுக்கெழுத்துப்போட்டி - 40
* நற்செய்தி - கிரயமே சிறந்தது
* பக்தர்களின் பயிலகம்
* வித்திடும் வித்தகர்கள்
* மூவரி முத்துக்கள்
* தேவனுடனான உறவுக்கான அனலின் அழைப்பு


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


---

***திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11***

# அனலின் குரல்



இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! காலஓட்டத்தின் சக்கரத்தில் கடந்து செல்லப்போகின்றது 2010ஆம் ஆண்டு. காலங்கள் ஓடுகின்றது. ஆண்டுகள் மறைகின்றது. இடையில் நடந்தவைகள் ஏராளம், இன்பங்களும் துன்பங்களும் மாறிமாறி மனதை தொட்டுச் சென்றுள்ளது. ஆனாலும் ஆண்டவர் இயேசுவின் அன்புக் கரத்துக்குள் இருக்கும் உங்களுக்கு எல்லாம் நன்மைக்கேதுவாக அவர் செய்து முடிப்பார். உங்களில் கிரியை செய்ய ஆரம்பித்த தேவன் அதை முற்றுமாக செய்து முடிப்பார்.

*2010இல் நீங்கள் முகம் கொடுத்த வேதனைகள், துன்பங்கள், வியாதியின் கொடூரங்கள், மற்றவர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள், நம்பியோர் கைவிட்ட வேதனைகள், வறுமையின் கொடுமை, தோல்விகள், பிரச்சினைகள் என ஒவ்வொன்றையும் தேவன் நன்கு அறிந்திருக்கிறார்.* இஸ்ரவேல் மக்கள் எகிப்திலே விட்ட பெருமூச்சைக் கேட்டவர், ஆகாரை வனாந்தரத்திலே கண்டவர், யோசேப்புடன் சிறையில் இருந்தவர், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவுடன் அக்கினிச் சூழையில் உலாவியவர், தானியேலுக்காக சிங்கங்களின் வாய்களைக் கட்டியவர், அன்னாளின் கண்ணீரைக் கண்டவர், உபத்திரவத்தின் மத்தியில் ஸ்தேவானுக்கு தம்மைக் காண்பித்தவர் நம் தேவன்.

அவர்கள் மட்டுமல்ல இன்னும் எத்தனையோ மக்கள் தம் வாழ்வில் பட்டவேதனை, துன்பங்கள் அதிகம். ஆனால் அவைகளின் முடிவில் அவர்கள் பெற்றது ஆசீர்வாதங்கள், கண்டது தேவனுடைய மகிமையை, அவருடைய கரத்தின் பாதுகாப்பை, பராமரிப்பை. இவ்வாண்டில் இவ் முடியும் தருணங்களில் இன்னும் தேவனுக்காக வைராக்கியம் பராட்டுங்கள். புதிய ஆண்டை தேவன் கொடுக்கும் புதுப்பெலத்துடன் சந்திக்க ஆயத்தமாகுங்கள்.

**துன்பங்களைக் கண்டு துவளவேண்டாம், முடிவில் இன்பம் உண்டு. நன்மைகள் உண்டு.** இவ்வாண்டில் இந்த இறுதி அனலின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். "கர்த்தருக்கு காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்: திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு" சங்கீதம் 27:14

— ஆசிரியர் —

# கடந்தது கடக்கட்டும்...



2010 நம்மை விட்டு
விடை பெறுகிறது
2011 வர ஆயத்தமாகிறது
சிநேகராய் இதுவரை
இருந்தவர் - இனியும்
இம்மானுவேலாய் கூடவே
இருப்பார்.



எத்தனை துன்பக் காற்றுக்கள்
அத்தனையையும் இன்ப வாசனையாக்கும்
இனிய நம் ஆண்டவர்
சத்தற்ற வாழ்வுகளை
சத்தியத்தால் சந்தித்து
நித்தியத்தில் சேர்ப்பதற்காய்
நிலையற்ற உலகை விட்டு
நித்திய வாழ்வுக்காய்
ஆயத்தமாக்குகிறார்.


ஆண்டுகள் முடிய முடிய...
ஆண்டவர் சீக்கிரம் வருகிறார்
அண்ட சராசரத்தையும் அசைக்கிறார்
அநுபவங்களும் அணு விஞ்ஞானமும்
அறிய முடியாமல் தவிக்கிறது.
போகும் ஆண்டு போகட்டும்
வரும் ஆண்டு வளரட்டும்
நன்றிகள் பெருகட்டும்
நான்கு திசையும்
சுவிசேஷம் பரவட்டும!.

**போதகர் நிக்ஷன்**

# கதையும் கற்றதும்

## எது தேவை???

ஒரு ஊரிலே ஒரு திடகாத்திரமான வாலிபன் இருந்தான். அவன் அநேக நாளாக வேலை ஒன்றுக்காக அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தான். **ஒரு நாள் தற்செயலாக ஒரு விறகு வியாபாரியைச் சந்தித்தான். இவன் வருந்திக் கேட்டுக்கொண்டதன் காரணமாக அந்த விறகு வியாபாரி அவனை தன்னிடத்தில் வேலைக்கு அமர்த்தினான்.** இந்த வாலிபனும் தான் நன்றாக வேலை செய்ய வேண்டும் என தன் மனதிலே தீர்மானித்துக்கொண்டான். அந்த விறகு வியாபாரியும் அவனிடம் ஒரு கோடரியைக் கொடுத்து அவன் மரங்களை வெட்ட வேண்டிய இடத்தையும் காட்டினான். உற்சாகத்துடன் புறப்பட்டான் அந்த வாலிபன்.



முதல் நாள் பத்து மரங்களை வெட்டினான் அந்த வாலிபன். **"நல்லது. தொடர்ந்தும் இவ்வாறே முயற்சி செய்"** எனப் பாராட்டினான் அந்த விறகு வியாபாரி. தனது எஜமானின் பாராட்டுதலினால் அடுத்த நாள் இன்னும் உற்சாகமடைந்தவனாக புறப்பட்டான் அந்த வாலிபன். ஆனால் அன்று அவனால் எட்டு மரங்களையே வெட்ட முடிந்தது. இப்படியே அவன் வெட்டக்கூடிய மரங்களின் எண்ணிக்கை நாளாக நாளாக குறைவடைந்து கொண்டு செல்லத் தொடங்கியது. அந்த வாலிபன் சோர்வடையத் தொடங்கினான். **தன்னால் ஏன் முன் போல மரங்களை வெட்டமுடியவில்லை என குழப்பமடைந்தான்**. தனது பலம் குறைவடைந்துகொண்டு செல்கிறது என நினைத்தான்.

எனவே அவன் தனது எஜமானிடம் சென்று தனது பிரச்சினையைக் கூறினான். தனக்கு இதன் காரணம் புரியவில்லை என புலம்பத்தொடங்கினான்.

அவனது எஜமான் சிரித்துக்கொண்டே **"நீ எப்போது கடைசியாக உன் கோடரியை கூர்மையாக்கினாய்" என்று கேட்டார். அந்த வாலிபன் சற்று தடுமாறியவனாக"** கோடரியை கூர்மையாக்குவதா? அதற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லையே. நான் முழு மூச்சாக மரங்களை வெட்டுவதை குறித்தே சிந்தித்துக்கொண்டிருந்தேன்" என்றான்.

**இதே போன்று தான் நாமும் சில வேளைகளில் தடுமாறிப் போகின்றோம். எமக்கு பலத்தையும் தைரியத்தையும் தருகின்ற தேவ பிரசன்னத்தை தேடாமல் எமது சொந்த முயற்சியிலே தொடருகின்றோம். ஆரம்பத்திலே காரியங்கள் நன்றாக அமைந்தாலும் காலப்போக்கிலே எமது வாழ்கையினதும் செயற்பாடுகளினதும் வினைத்திறன் குறை வடைந்துகொண்டே செல்லும். காரணம் நாம் எமது காரியங்களுக்காக தேவனின் பாதத்தில் காத்திருந்து வல்லமையை பெற்றுக்கொள்ளாததே ஆகும். எனவே ஒரு கோடரிக்கு கூர்மை எவ்வளவு அவசியமாகின்றதோ அதே போல் தான் எம் வாழ்க்கைக்கும் தேவ வல்லமை அவசியம் என்பதை மனதிலே பதிப்போமாக. அப்போது எம் வாழ்க்கையும் கூர்மையாகும் அதனூடான பலன்களும் பெருகும். தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.**



**கெ. இன்பரூபன்**

## வினா விடை - 42

01. இந்தக் காரியம் அவர்களுக்கு பாவமாயிற்று: யாருக்கு?

02. தலைகுனிந்து முகங்குப்புற விழுந்து பணிந்தது யார்?

03. உன் கையின் கிரியையை நீ இனி பணிந்து கொள்ளாய் என வாசிப்பதெங்கே?

04. நூதன தேவர்களை தெரிந்து கொண்டவர்கள் யார்?

05. அவர்களுடைய பிள்ளைக்கு இரங்காதிருப்பேன் ஏன்?

06. எதைப் பூச்சி தின்றுபோடும்?


07. சீரியா தேசத்திலிருந்த சிறுபெண் என்ன செய்துகொண்டிருந்தாள்?

08. யாரிடத்தில் ஆலோசனையும் இராமல் ஒழிந்து போகும்?

09. அவருடைய வார்த்தையின் படி செய்வதற்கு வல்லமையுள்ளது எது?

10. அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் யார்மேல் இருக்கிறது?



சந்தையில் ஒரு ஆளோ பொருளோ இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும் பல கருவிகள் வந்துள்ளன. அவை முதியவர்கள், குழந்தைகள், பணப்பை, செல்லப்பிராணிகள் போன்ற யாவையும் கண்காணிக்கும் என்கிறார்கள். இக் கருவிகள் பயனுள்ளவைகள் என்றாலும ஆகாருக்கு இவைகளால் ஒரு பயனும் கிடைத்திருக்காது. **வனாந்தரத்தில் அலையும் அவளுக்கும், அவள் வயிற்றிலிருக்கும் பிள்ளைக்கும் நன்மை செய்யும்படியாய் ஒருவரும் அவளுக்காக கவலைப்படவுமில்லை, அவளை கண்காணிக்கவும் இல்லை, எல்ரோயியைத் தவிர**. எபிரெய மொழியில் எல்ரோயி என்றால் **"நீர் என்னைக் காண்கிற தேவன் என்று அர்த்தமாம் (ஆதியாகமம் 16:13)**.

ஆபிரகாமின் மனைவி சாராயின் அடிமைப் பெண் ஆகார். சாராய் தான் மலடியாய் இருந்தபடியால் தேவனுடைய வாக்குத்தத்தம் இருந்தாலும் ஆபிரகாமுக்கு பிள்ளையைப் பெற்று சந்ததிகளை உருவாக்க முடியாத பலவீனமான கன்னியாக தன்னை எண்ணி ஆகாரை ஆபிரகாமுக்கு கொடுத்தாள். தனக்கு எந்த வழியிலாவது ஒரு சுதந்தரவாளி வேண்டும் என்ற அழுத்தத்தினால் பிறந்தது இந்த துர்ப்பாக்கியமான யோசனை.



ஆகார் கர்ப்பமாகி சாராயை அற்பமாய் நினைத்தாள். சாராய் அவளைக் கொடுமைப்படுத்தினாள். தாங்க முடியாமல் ஆகார் வனாந்தரத்திற்கு ஓடிவிட்டாள். **அங்கே தன் கடந்த கால சிறுமை யையும் _நம்பிக்கையே இல்லாத எதிர் காலத்தையும_ நினைத்துக் கலங்கிய போது, தன்னைக் கண்டு தன் மேல் கரிசனையுள்ள கர்த்தரைக் கண்டாள்.**

எல்ரோயி உன் கடந்த கால சிறுமையையும் இன்றைய வேதனையையும் நம்பிக்கையற்ற உன் எதிர்காலத்தையும் காண்கிறார். அவருடைய கண்களுக்கு தரையில் விழும் ஒரு அடைக்கலான் குருவி கூட மறைந்திருப்பதில்லை. (மத்தேயு 10:29-31) அவரே இன்று உன் கவலைகளையும் உன்னையும் காண்கிற தேவன். **வருவாயா அவரிடம், வாழ்வை வளமுள்ளதாக்கும் இயேசுக் கிறிஸ்து உனக்காக காத்திருக்கிறார். விரைந்து வா...**

ரோமா




**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாலிப உள்ளங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!.**

தேவகிருபையால் இந்த ஆண்டின் இறுதி பகுதியை நோக்கிவர அவர் நமக்கு பெரிய கிருபை செய்தபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.

பரிசுத்த வேதாகமம் வாலிபர்களைக் கனப்படுத்தி அவர்களை உயர்த்தி மகிழ்வதை நாம் காணலாம்.

ஆனால் வாலிப காலமானது தொடர்ந்தும் நிலையாகவே நம்மோடு கூட இருக்கக் கூடியது என்பது முடியாததாகவே உள்ளது. **எனவே மறைந்து அல்லது கடந்து போகும் இவ் வாலிப நாட்களில் நீ பிரகாசிக்க வேண்டும் என ஆண்டவர் விரும்புகின்றார்.**

**மறைந்து போகும் வாலிப ஜீவியத்தில் மறையாத அடிச்சுவடுகளை பதிப்போமாக. மற்றவர்களும் கிறிஸ்துவை நெருங்க (கிட்டிச்சேர) ஓர் உறுதுணையான உள்ளங்களாக எழும்புவோமா.**

## வாலிபத்தில் மோசே

- வாலிபத்தில் அனைத்து வசதிகளுடனும் இராஜ குமாரத்தியின் மகனுக்குரிய அனைத்து உரிமைகளுடனும். கலக்கம் இல்லாமல் சகலவிதமான கல்வியிலும் கற்று தேறினவ

**னான மோசே. இவன் பெரியவனான போது தனது சகோதரர்படுகின்ற வேதனை, உபத்திரவம், தாங்க முடியாத கஸ்ரம் இவை அனைத்தையும் கண்டு வைராக்கியம் கொள்ளுகின்றான். எகிப்தியன் ஒருவனை வெட்டி அவனை மணலிலே புதைத்தும் போடுகின்றான்.**

தானும் தன் பாடுமாக சந்தோஷமாக வாழ்ந்து மகிழ்ச்சியாய் வாழ்நாட்களை களித்திருக்க வேண்டியவன். மக்கள் அநியாயமாய், கட்டப்பட்டிருப்பதையும் தகாத விதமாய் நடத்தப்படுகிறதையும் பார்த்து சும்மா இருக்க முடியவில்லை. முடிவாக நியாயம் செய்பவனாக எழுந்து கொலையும் செய்துவிட்டான்.

செய்தி மன்னனுக்கு சென்றுவிட்டது. உடனடியாகவே மேசே தேசத்தைவிட்டு வேறு தேசத்திற்கு ஓடிப்போகின்றான்.

விசுவாசத்தினாலே மேசே தான் பெரியவன் ஆனபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன், எனப்படுவதை வெறுத்து **அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிசங்களிலும் கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினான் (எபிரேயர் 11:24-26).**

**வாலிபத்தில் உன்னைப் பாதுகாக்க சில வழிமுறைகள்.**

- ✓ **விசுவாசத்தில் நீ பெலப்பட வேண்டும். கூடவே கிறிஸ்து இயேசுவைப் பற்றிய சாட்சியில் ஸ்திரப்பட்டிருக்க வேண்டும்.**

- ✓ **உலகத்தின் பெரிய அல்லது போற்றுதலுக்குரிய எல்லாவிதமான மேட்டிமையான சிந்தைகளையும் நீ வெல்ல வேண்டும். அவற்றை வெறுத்துவிட வேண்டும். பாவத்தை முற்றிலுமாய் வெறுத்துவிடுவதோடு எந்தவிதமான சம்பந்தமும் உனக்கு பாவத்துடன் இருக்க முடியாது. இருக்க கூடாது.**

- ✓ பார்வோனுடைய குமாரத்தியின் மகன், தேவன் இல்லாத காரியங்களோடு உறவு முறை, நெருக்கமான ஐக்கியம் இவற்றை முற்றிலும் விட்டுவிடு. இயேசுவின் பிள்ளை என்ற உணர்வை எப்போதும் கொண்டிரு.

- ✓ பாவத்தில் சந்தோஷம் காண்பதை விட்டுவிடு. இன்றே நிறுத்து. அனுபவிக்க (தொடர்ச்சியாக ஈடுபட்டு கொண்டு இருக்க) விரும்பாதே. உன் சரீரத்தை மாத்திரமல்ல விலையேறப் பெற்ற ஆத்துமாவையும் தப்புவித்துக் கொள்வாய்.

- ✓ தேவனுடைய ஜனங்களுடன் ஐக்கியம் கொள். ஒரு வேளை அது உனக்கு கசப்பான அனுபவமாக (துன்பமாக)வும் கூட இருக்கலாம். ஆனால் சீக்கிரமாய் கர்த்தருடைய பிள்ளைகளின் ஐக்கியத்தில் சேர்ந்து கொள்... தாமதிக் காதே......

- ✓ வரும் பலன் மேல் நோக்கமாயிரு. இயேசு கிறிஸ்து உனக்காக ஏற்படுத்திய ஸ்தலத்தில் சேர்க்கப்படும் போது அவர் அதிகமான பலன்கள் நன்மைகளையும் உனக்கு கூடவே தருவார்.

- ✓ நோக்கத்தில் மாற்றம் - நித்திய ஜீவன். இவ்வுலக பொக்கிஷங்களை கிறிஸ்துவிலும் மேலாக நோக்காதே, நாடாதே.

- ✓ கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை பாக்கியம் என்று எண்ணு.

நிச்சயமாகவே உன் வாலிபம் மறைந்து போனாலும் மறையாதே, மறைக்க முடியாத செயல்கள் வரப்போகும் சந்ததிக்கு நிச்சயமாகவே ஆசீர்வாதமாக இருக்கும்.

உன் நோக்கத்தை முற்றிலும் சிலுவையின் மீது வைப்பாயாக. இனிவரும் பலன் மேல் நோக்கமாயிரு. இதை உன்னிடம் எதிர்பார்க்கிறார்.



**அன்பரின் அறுவடையில்.**
**போதகர் வேதநாயகம் சுமணன்.**

# குறுக்கெழுத்துப்போட்டி – 40

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | | | |
| | | | | | | | 7 |
| | | | | 4 | | | |
| | | 8 | | | | | 10 |
| | | 5 | | | | | |
| 9 | | | | | | 6 | |



## இடமிருந்து வலமாக

01. யாத்திரகாமத்தில் இஸ்ரவேல் மக்களின் நியாயங்களை விசாரிக்கத்தக்க வழிமுறையைக் கற்றுக் கொடுத்தவர். இவர் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தியவருடைய உறவு முறையானவர்.
04. இயேசு தொட்ட போது குஸ்டரோகி ............. பெற்றான்.
05. தாவீதை அதிகமாக நேசித்த இளவரசன்.

## வலமிருந்து இடமாக

04. யூதாஸ் தலைகீழாக விழுந்தான். அவன் வயிறு வெடித்து .............களெல்லாம் சரிந்து போயிற்று.
08. குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமான கர்த்தருடையது.
10. இரண்டு மடங்கு ஆசீர்வாதம் பெற்றவன்.

## மேலிருந்து கீழாக

02. ஆதிப்பெற்றோரின் ஒரு பிள்ளை.
03. சுவிசேஷ புத்தகங்களில் முதலாவதாக இவர் சுவிசேஷத்தை எழுதினார் என்று நம்பப்படுகிறது.
04. நேபுகாத்நேச்சார் ராஜ அரண்மனையில் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி தெரிவு செய்தவர்கள் ராஜ.......... சேர்ந்தவர்கள்.

## கீழிருந்து மேலாக

05. கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்பதை அறிவித்த தீர்க்கதரிசி.
06. விசுவாசமும் இதுவும் இணைந்ததுதான் மார்க்கவசம் என தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிருபத்தில் சொல்லப்பட்டுள்ளது.
07. இது ஒரு பட்டணம்.
09. இவன் மூலமாக மனுக்குலத்துக்குள் பாவம் வந்தது.

# கிரயமே சிறந்தது




புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைச் சென்று பார்ப்பது என்றாலே கிறிஸ்தவர்களுக்குக் கொண்டாட்டம்தான். அதுவே ஒரே சபையைச் சேர்ந்த விசுவாசக் குடும்பத்தினர் பலர் ஒன்று சேர்ந்து சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதாக இருக்குமென்றால் அதில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. குறிப்பிட்ட இடங்களை கண்டுகளிக்கும்போது அவர்கள் கண்முன் வேதாகம நிகழ்ச்சிகள் தொடர்படம் போல ஓடும். விசுவாசிகள் அந்நிகழ்ச்சிகளோடு ஒன்றிணைந்து விடுவார்கள்.



அவ்வாறு பயணம் மேற்கொண்ட ஒரு குழுவிற்குப் பாடல் தலைவராகத் திருவாளர் டிக்ஃபால்க்னர் பணியாற்றினார். அந்தக் குழுவை வழிநடத்த ஒரு வழிகாட்டியும் இருந்தார். அப்போஸ்தலனாகிய யோவான் கடத்தப்பட்ட பத்மு தீவிற்கு அன்று அவர்கள் பயணம் மேற் கொண்டனர். அத் தீவில் ஒரு குகையில் தங்கியிருந்து வெளிப்படுத்தின விசேஷத்தை அவர் எழுதினதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குகையிலிருந்து வெளியே வந்த கூட்டத்தார் அருகில் இருந்த மலை மீது ஏறினார்கள். அங்கே நின்று யோவான் எவ்வாறு பேரரசன் டொமிடியனால் கைது செய்யப்பட்டார், நாடு கடத்தப்பட்டார் என்பதைப் பற்றி அந்த வழிகாட்டி ஒரு பிரசங்கம் ஆற்றினார். பின்னர் ஒரு பாடலைப் பாடும்படிக்கை கேட்டுக் கொண்டார்.

தன்னோடு ஒலிபெருக்கிகளைடிக் கொண்டு வந்திருந்தார். அவர் பாடும்போது இன்னிசை அந்தத் தீவு முழுவதும் தொனிக்கும். வெளிப்படுத்தின விசேஷம் 5:12ஆம் வசனத்தைப் பாடலாக டான் வைர்ட்ஜன் என்பார் வரைந்துள்ளார். அதனை அன்று அவர் பாடினார்.

ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே!

வல்லமையும் ஐசுவரியத்தையும்

ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும்

மகிமையையும் ஸ்தோத்திரத்தையும்

பெற்றிடப் பாத்திரர் அவர்தாமே!

ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே!

இயேசு கிறிஸ்துவின் மீட்பின் செயலைப் பற்றிய நற்செய்தி மலைப்பாங்கான அத்தீவின் எட்டுத் திக்கிலும் தொனித்தது.

அவர் இன்னும் பாடலை முடிக்கவில்லை. வேறொரு சுற்றுலாக் குழுவினர்

அங்கு வந்தனர். அக்கூட்டத்தைச் சேர்ந்த பலரும் இவர்களைக் கண்டும் காணாதது போலக் கடந்து சென்றனர். ஆனால் ஒரு பெண்மணி குள்ளமாக, கறுப்பாக இருந்தாள். டிக்கின் அருகில் வந்தாள்: அவருடைய முகத்தில் காறி உமிழ்ந் தாள்.



அவளுடைய குறி தப்பவில்லை. ஆனால் அவளுடைய அநாகரிகச் செயல் அவர் பாடுவதைத் தடை செய்யவில்லை. மெய் மறந்து பாடினார். அவருடைய முகம் விண்ணுலகில் சஞ்சரிப்பவர் போலவே தோன்றிற்று. ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே என்று பாடி முடித்தார்.

கிறிஸ்தவச் சுற்றுலாக் குழுவினர் கோபம் கொண்டனர். பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமெனக் கூறினர். இந்த அநாகரிகச் செயலை சும்மா விடக் கூடாது என்றும் கூறினர். ஆனால் டிக் அதற்கு இடங்கொடுக்கவில்லை. **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முகத்தை இவ்வுலக மனிதர்கள் அவமானத்தாலும், உமிழ் நீரினாலும் மறைத்தனரே! அவர் எதிர்த்துப் போராடவில்லை. அவர் ஏளனம் செய்யப்பட்டார். அவர் மீது துப்பினார்கள். ஆனால் நமது இரட்சகரோ பதிலுக்குப் பதில் செய்யவில்லை.** இயேசு கிறிஸ்துவின் முகத்தில் மனிதர்கள் காறி உமிழ்ந்த போது; உம்மைக் குறித்து இப்படித் தான் நாங்கள் எண்ணுகிறோம் என்று படைப்பாளரைப் பார்த்து அவருடைய படைப்புக் கள் சொல்வதாக இருந்தது. ஆனால் அந்தப் படைப்பாளர் சிலுவையில் தம் உயிர் ஈந்தார். **உங்க ளிடம் எவ்வளவாக அன்பு கூருகிறேன் பாருங்கள்** என்று அவர் தம் படைப்புக் களை நோக்கிக் கூறுகிறார்.

**அவருடைய இத்தகைய ஆவியை உடையவர்களாய் நாம் காணப்படும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள் (ரோமர் 12:19). நாம் கர்த்தருடைய அநுக்கிரக காலத்தில் வாழ்கிறோம். தேவனுடைய கோபாக்கினை நாள் இதுவல்ல என்பதனை நினைவுகூருவோம்.**

**அன்பானவர்களே நீங்களும் இயேசுவின் அன்பை எண்ணிப்பாருங்கள். இன்றே ஒரு தீர்மானம் செய்யுங்கள்.**

"தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக"

**போதகர் நிக்ஷன்**

***அவர் (இயேசு) வையப்படும் போது பதில் வையாமலும் பாடுபடும் போது பயமுறுத்தாமலும் நியாயமாய் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.***

***-- 1பேதுரு 2:23***




## ஆவிக்குரிய போராட்டம்

**கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் பழைய சிருஷ்டியை ஒளித்து புதிய சிருஷ்டிப்புக்குள் வழி நடத்தியது**. இயேசு பரமேறியது சாத்தானுக்கு முன் எமக்கு ஒரு புதிய நிலையை தருகின்றது.

**தேவனுக்கு முன் இப் புதிய நிலை மரணம், உயிர்த்தெழுதல் மூலம் உண்டாகின்றது**. ஆனால் பிசாசிற்கு முன்னாக இந்த புதிய நிலை இயேசுவின் பரமேறுதலினால் காக்கப்படுகின்றது. எபேசியர் 1:20-22 கவனிக்க.

**இயேசு பரலோகம் சென்ற போது பரலோகத்திற்கு ஒரு வழியை உண்டுபண்ணினார்**. இதனால் அவரது சபையும் பரலோகம் ஏறலாம். **எம் ஆவிக்குரிய எதிரி வானமண்டலங்களிலேயே உள்ளான்**. ஆனால் கிறிஸ்து ஏற்கனவே உன்னதத்திற்கு ஏறி போய்விட்டார்.

**இயேசுவின் தற்போதைய நிலை - எபேசியர் 1:21** இதனால் தேவன் பிசாசையும் அவன் தூதர்களையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படுத்தினார்.


**கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் மீட்போடு சம்பந்தப்பட்டது**. பரமேறியது போராட்டத்தோடு சம்பந்தப்பட்டது. **அது மரணம் - உயிர்ப்பு சம்பாதித்ததை நிறைவு செய்வதாகும்**. அத்துடன் கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்காரும் அனுபவமாகும்.

**எபேசியர் 1ம் அதிகாரத்தில் கிறிஸ்து எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்திருக்கிறார் என்றும்** எபேசியர் 2ம் அதிகாரத்தில் நாமும் அவருடன் உட்கார்ந்து இருக்கிறோம் என்றும் கூறுகின்றது. அதாவது திருச் சபையும் மேலாய் உள்ளது. ஆகவே ஆவிக்குரிய எதிரி காலின் கீழ்.

**எபேசியர் 1, 2, 6 அதிகாரத்தில் உள்ள தொடர்பை பார்ப்போம்.** அதிகாரம்01 கிறிஸ்துவுக்குள் எங்கள் நிலையைக் காண்பிக்கிறது. **அதிகாரம் 02 கிறிஸ்துவுக்குள் திருச்சபையின் நிலையைக் காண்பிக்கின்றது.** அதிகாரம் 06 கிறிஸ்துவினால் அந்த நிலைக்குள் பிரவேசித்த சபை செய்ய வேண்டியது காண்பிக்கப்படுகிறது.

**அதிகாரம் 01 கிறிஸ்து பரலோகத்தில் இருப்பதை சொல்கிறது.** அதிகாரம் 02சபை உன்னதங்களிலே கிறிஸ்துவுடன் உட்கார்ந்து இருக்கிறது. **அதிகாரம் 06ல் ஆவிக்குரிய போராட்டம்.** அதிகாரம் 02ல் சொல்லப்பட்ட வண்ணம் உட்கார்ந்து இருப்பதால் மாத்திரம் போதாது. **அதிகாரம் 06ல் சொல்லப்பட்ட வண்ணம் நிற்கவும் வேண்டும்.** எப்படி? எதிர்த்து நிற்க வேண்டும். **எதற்கு? அதிகாரங்கள், துரைத்தனங்கள், அந்தகார லோகாதிபதிகள், வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள். எபேசியர் 6;13**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பரூபன்)



**முற்றும்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 39
## சரியான பதில் எழுதியவர்கள்

01. நி.ஜெகா - மயிலங்காடு
02. பா.வதனி - காரைநகர்
03. ச.நாகேஸ்வரி - காரைநகர்
04. சி.கல்யாணி - காரைநகர்
05. த.சிவாஜினி - காரைநகர்
06. பா.டிலானி - காரைநகர்
07. பா.தர்சினி - காரைநகர்
08. ம.டயானி - பாண்டவெட்டை
09. பா.மோகனதாஸ் - காரைநகர்
10. பா.கோமதி - காரைநகர்
11. க.ஜெனிலா - ஊர்காவற்றுறை
12. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
13. வி.சர்மிளா - ஊர்காவற்றுறை
14. ஆ.மயூரதி - மீசாலை
15. து.விதுசன் - அல்லாரை
16. து.துயானி - அல்லாரை
17. பொ.தயாளினி - காரைநகர்
18. சி.தங்கமணி - மீசாலை
19. மார்கிரட் - மீசாலை.
20. த.மதியழகன் - பாண்டவெட்டை
21. ம.சிவகௌரி - பாண்டவெட்டை
22. ம.தேவசாந்தன் - பாண்டவெட்டை
23. ம.தேவகிறேசியன் - பாண்டவெட்டை
24. ம.தர்சிகா - பாண்டவெட்டை

# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி...

# இறுதிக்காலங்களில் அருட்பணி

1889ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ***தேவன் சீனாவிலுள்ள ஒவ்வொருவருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்*** என்ற பாரத்தை ஹட்சனில்உண்டாக்கினார். அத் திட்டத்தைத் தேவன் நிறைவேற்றக் கட்டளையிட்ட பின்னர் ஏராளமான எதிர்ப்புகளினூடேயும் அவர் தேவசித்தத்தை நிறைவேற்ற துணிந்து நின்றார். சீன உள்நாட்டு மிஷனின் நலனுக்காய் இடைவிடாமல் உழைத்த ஹட்சன் டெயிலரின் உடல் வலிமை ஒன்பதாவது தடவையாக சீன மிஷனெரிப் பணியில் ஈடுபட்டு சீனாவுக்கு சென்ற போது குன்றத் தொடங்கியது. வருங்காலத்தில் மிஷனைப் பொறுப்புடன் நடத்தும் நபரை அவர் தேடிக் கொண்டிருந்தார். ***உள்நாட்டு மிஷன் படிப்படியாக வளர்ச்சியடைந்து கொண்டேயிருந்தது***. ஹட்சன் வென்செளவுக்கு சென்று அங்கு கொலராவால் இறந்த மிஷனெரிகளைக் குறித்த செய்தியைக் கேட்டு மனம் உடைந்தார். அவருக்குக் கட்டாய ஓய்வு தேவைப்பட்டது.

1896ஆவது வருடத்தில் கோடைகாலத்தில் அவர்கள் மிஷன் வீட்டில் தங்கினர். அவர்களுக்கென சொந்தமாக ஒரு வீடு தேவையில்லாதிருந்தது. சுவிசேஷம் அறிவிக்கப்படாத கியாங்ஸி மாநிலத்தில் 99 நகரங்கள் இருந்தன. அங்கு சுவிசேஷம் அறிவிக்க்பபட வேண்டுமென்று ஒழுங்கு செய்யப்பட்டது. ஹட்சன் டெய்லர் வீட்டிலிருந்து கொண்டே பணியாளர்களிடம் தொடர்பு வைத்திருந்தார். ***'கர்த்தரின் பெலத்தால் முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் குறைவுகளில் அவர் போதுமானவராயிருப்பார். உங்கள் பலவீனத்தில் அவர் பலம் உங்களைத் தாங்கும். மனிதர்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று பாராதேயுங்கள். தேவனின் செய்தியை எப்போதும் எல்லாருக்கும் கொடுக்கத் தயாராயிருங்கள்"*** என்று உற்சாகமூட்டி எழுதி அவர்களை ஊக்கப்படுத்தினார்.

தன் சொந்த குழந்தைகள் விஷயத்திலும் அவர்கள் ஆத்துமா ஆசீர்வாதத்தால் நிரம்ப மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டார். ***'ஒரு டம்ளரில் காற்றும் தண்ணீரும் நிரம்பியிருக்கமுடியாது. டம்ளரிலுள்ள தண்ணீரைக் கொட்டிவிட்டால் காற்று நிரம்பும். இரண்டும் சேர்ந்து நிரப்ப முடியாது. அது போல வெறுமையான ஆத்துமாவை அவரது ஆசீர்வாதம் நிரப்பும். அவர் நமக்கு சகலவற்றையும் தந்துவிட்டார். இனி நாம் நம் பாத்திரங்களில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நிரப்பப்பட ஒப்புவித்தல் அவசியம்***"என்று உதாரணங்களுடன் தன் அன்பு மகளுக்கு அருமையாய் கடிதம் எழுதியிருந்தார்.

1900ஆம் ஆண்டு பிறந்தது. டவகர் பேரரசியின் தூண்டுதலில் அந்நிய நாட்டினர் மேல் பகைமையுணர்ச்சி வளர்ந்து கொண்டிருந்தது. அந்நிய நாட்டினருக்கு எதிராக எழும்பிய "பாக்ஸர் புரட்சி" வளர டவகர் பேரரசி தன் ஆதரவையளித்தாள். எல்லா மாநிலங்களின் க்வர்னர்களும் அதிகாரிகளும் அப் புரட்சிக்கு ஆதரவளிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அச் சமயம் ஹட்சன் டெய்லர் நியூயார்க்கிலுள்ள மிஷனெரி மாநாட்டில் கலந்து கொள்ள பயணத்திலிருந்தார். அவரோடு அவரது மகன் டாக்டர் ஹாவர்ட்டும் மருமகளும் சென்றனர். அங்கு ஏராளமான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. யாவரும் சீனாவுக்காக பாரத்தோடு ஜெபித்தனர். ஹட்சன் இக் கூட்டங்களுக்குச் சென்று நற்செய்தி அறிவித்து வந்தார். அவரது உடல் மிகவும் பலவீனப்பட்டது. எனவே ஜென்னி டெய்லரின் ஆலோசனைப்படி ஓய்வெடுக்க சுவிட்சர்லாந்துக்குச் சென்றனர். அங்கு திரு ஹோப்மேனும அவரது மனைவியும் அவர்களை ஏற்றுக்கொண்டனர்.

சுவிட்சர்லாந்திலிருக்கையில் "பாக்ஸர் புரட்சியினால் ஏராளமான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர்". சீன அரசியலில் விரைவில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. 'லிங்-சாங்' தலைமைப் பதவியை ஏற்றார். அயல் நாட்டினரின் உதவியோடு கலகத்தை விரைவில் அடக்க அவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். ***ஆனால் அதற்கு முன் சீன உள்நாட்டு மிஷன் குழந்தைகள் உட்பட 58பேர்களை இழந்து விட்டது.***

**1905 ஜீன் 01ஆம் திகதி இரவு சாப்பாட்டை ஹட்சன் டெய்லரின் அறைக்கு அவரது மகன் டாக்டர் ஹாவர்ட் கொண்டு வந்தார். பிறகு சாப்பாட்டிற்கான ஏதோ ஒன்றை வாங்க வெளியே சென்றார். அப்போது ஹட்சனின் மருமகள் அவருருகே இருந்தார்கள். அவர் சில கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது தலை சற்று சரிந்தது. எனவே மெதுவாக சாய்ந்து அமர அவரது மருமகள் தலையணை வைத்து கொடுத்தார்கள். அவ் வேளை அவரது தலை மெதுவாக அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்தது. பின் உணர்விழந்தார்.**

"ஹட்சன் டெய்லர் செய்த சேவை முடிந்தது. சீன நண்பர்கள் எல்லா ஒழுங்குகளையும் செய்தார்கள். அவர் கடந்துவிட்டார். ஆனால் அவரது அற்புதமான அன்பின் இறுக்கம் எங்களை அவரது பக்கம் இழுத்தது. அவரைப் பார்க்கையில் அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்ததாகவே கண்டோம். அருமை தகப்பனாரின் உழைப்பு-பயணம்-களைப்பு யாவும் முடிந்தன. பத்திரமான வீட்டில் சேர்ந்து விட்டார்". இவ்வாறு ஹட்சன் டெய்லரின் மருமகள் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ஹட்சன் தான் சீனாவில் மரித்தால் தன் அன்பு குழந்தைகள் அடக்கம் செய்யப்பட்ட சிங்கியாங் பகுதியில் அடக்கம் பண்ணப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தபடியால் சிங்கியாங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அதற்கான செலவுகள் யாவையும் சாங்ஷா கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொண்டனர். **சிங்கியாங் ஆற்றிற்கு அருகாமையிலுள்ள பகுதியில் அவர்களுடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஹட்சன் டெய்லர் தன் மனைவி மக்களினருகே அடக்கம் செய்யப்பட்டார்.**

முற்றும்



# மூவரி

## முத்துக்கள்

வற்றிடாத
ஊற்று
சிலுவை அன்பு

யானையின் பெலம்
தும்பிக்கை
நமது பெலம் நம்பிக்கை

அழுந்து போகாத
வாசம்
விசுவாசம்

தேவனின் ஊழியம்
முடிவடைவது
தேவனின் பரலோகத்தில்

வேசம் போடாத
கண்கள்
உண்மைகள்

இழப்பது உரிமை
என்றால்
இருப்பது மகிமையாகும்

பதவிகளைத் துறந்தவர்கள்
பரலோக தகுதி
பெறுபவர்கள்

சிலுவைப் புண்ணியத்தை
மறைக்காமல் அறிவிப்பது
இயேசுவின் இரத்தம்

அழுக்குபடுத்தாத அழகு
சத்திய
வேதாகமம்

பொன்னும் வெள்ளியும்
போதும் என்று சொல்லாதது
தேவனின் வல்லமை




# சாத்தானின் தந்திரங்கள்

**நான் என் சபைக்காக ஜெபித்துக் கொண்டிருந்த போது ஆண்டவர் சொன்னார் நம்முடைய தோட்டம்: எங்களுக்காய் கொடுத்த திராட்சைத் தோட்டமாகிய இநதச் சபை, பூவும் பிஞ்சுமாயிருக்கின்றதே. எழுப்புதலுக்கு ஆயத்தமாய் இருக்கின்றது. சீக்கிரமாக ஒரு எழுப்புதலை தேவன் இந்த சபையிலே கட்டளையிடப்போகின்றார். அந்த எழுப்புதலுக்கு காரணராய் நாங்கள் இருக்கின்றோம் என்ற வாக்குத்தத்தத்தின் செய்தியை ஆண்டவர் எனக்கு தந்தார்.**


ஆம்பிரியமானவர்களே தேவனுடைய இருதயத்திலிருந்து உருவான ஒவ்வொரு சபைக்கும் தேவன் கொடுக்கும் உன்னதமான வாக்குத்தத்த மாகும். ஏனெனில் இது எழுப்புதலின் காலம். **இயேசுகிறிஸ்து சீக்கிரமாக வருகிறார்.** எழுப்புதலுக்கு ஆயத்தமா கும் நாம் இச் செய்தியின் மூலம் எழுப்பு தலுக்கு ஆயத்தமாவோம். சாத்தானின் தந்திரங் களை அறிந்து அதற்கு எதிர்த்து போராட வேண்டிய காலம். சபைகளை உடைத்து நீதியாய் செயல்படுவது போன்ற சூழலை உருவாக்கி எழுப்புதலை தடை பண்ணும் படியாய் சத்துருவானவன் தனக்கு கொஞ்ச காலம் உண்டு என எண்ணித் தீவிரமாய் செயல்படும் காலம் இதுவாகையால் நாம் விழிப்புடன் செயல்பட வேண்டியது அவசியமாகிறது. இதற்காக சாத்தானின் தந்திரங்கள் என்ற செய்தி உங்களுக்கு உதவி செய்யும் என நம்புகிறேன்.

**உன்னதப்பாட்டு 2:15 திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப்பிடியுங்கள். நம்முடைய திராட்சத்தோட்டங்கள பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே.** நீங்கள் பூவும் பிஞ்சுமாய் இருக்கின்றீர்களே. எங்களைக் கொண்டு தேவன் பெரிய ஒரு அறுவடையைச் செய்ய ஆயத்த மாக இருக்கின்றார். அதற்காக எங்களை ஆயத்தப் படுத்துகின்றார். **ஆனால் அதற்கு முன்பதாக திராட்சத் தோட்டங்களைக்**



**கெடுக்கின்ற குழி நரிகளையும், சிறுநரிகளையும்** நமக்குப்பிடிக்க **வேண்டும்.** இந்தக் குழிநரியும் சிறுநரியும் தோட்டத் திற்குள்ளே இருந்து எழுப்புதல்

வராத படிக்கு அங்கும், இங்கும் ஓடி ஓடி அந்தப் பூவையும், பிஞ்சையும் கெடுத்துக் கொண் டிருக்கின்ற இந்த நாட்களிலே நாங்கள் அவைகளை



எமக்காய் பிடித்து அதை மேற்கொள்ளு வோமென்றால் எழுப்புதல் நிச்சயமாய் வரும் என்று ஆண்டவர் சொல்லுகின்றார். **நாங்கள் எச்சரிக்கையடைந்து அந்தக் குழிநரிகளையும், சிறுநரிகளையும்மமக்காய்ப் பிடிக்கும் போது தான் சபையிலே எழுப்புதல் உண்டாகும். எழுப்புதல் அடைந்த சபையின் மூலமாய்தேசத்திலே எழுப்புதல் உண்டாகும்.**

நரியானது பிசாசிற்கு ஒப்பிடப் படுகின்றது. நரி மிகவும் தந்திரமுள்ளது. அது தந்திரமாய் பூவையும், பிஞ்சை யும் கெடுத்துப் போடும்படி செயற்படும். இந் நிலை இன்றைக்கு சபைகளுக்குள் ளாய் மலிந்து காணப்படுகின்றது. தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப் படுகின்ற போது மறுவியாக்கியானம் கொடுத்து அந்த வார்த்தை அந்தப் பூவுக்கும், பிஞ்சுக்கும் உரமூட்டி அது பலன் கொடுக்காதபடி தடை பண்ணு கின்றது. அந்த வார்த்தை என்கின்ற சத்தியத்தின் மூலமாய் அந்தப் பூவும், பிஞ்சும் நல்ல பலன் கொடுக்க முடியாத படிக்கு வார்த்தையைக் கெடுத்துப் போடும் படியாய் பிசாசானவன் தன்னுடைய வர்களை வைத்துக்கொண்டு குள்ள மாய் வார்த்தைக்கு மறுவியாக்கியா னங்கள், வார்த்தையை தவறாய் விளங்கிக்கொள்ளத் தக்க தன்மைகளைப் போட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றான்.

எனவே பிரியமானவர்களே, **நீங்கள்தான் அந்தப் பூவும், பிஞ்சும்.** எனவே உங்களுடைய காதிலே வந்து குழிநரி இப்படி பிரசங்கிக்கக்கூடாது அப்படிப் பிரசங்கிக்க வேண்டும் என்று தேவை யற்ற விதத்தில், அல்லது ஆதாரமற்ற விதத்தில் குற்றச்சாட்டுக்களைக் கூறினால் உடனடியாக அதனைப் பிடித்துக் கொள்ளுங் கள். அது உங்க ளைக் கெடுத்துப்போடும். ***இன்றைக்கு சபையிலே எழுப்புதலுண்டா காதபடிக்கு, சபையிலே தேவ ஆவியா னவர் கிரியை செய்ய முடியாதபடிக்கு இருக்கின்ற ஒரு மிக முக்கியமான காரணம்: ஒருமன மற்ற தன்மை.*** தேவன் சொன்னார் என்னுடைய நாமத்தினாலே எங்கே ஒன்றோ இரண்டு பேர்கள் ஒருமனப் பட்டுக் கூடுகின்றார்களோ அங்கே அவர்கள் மத்தியில் நான் இருப்பேன். ஆனால் இன்று சபைகளில் நூறு, இரு நூறு, முன்னூறுபேர் என்று கூடியும் தேவனுடைய அசைவாட்டத்தைக் காண முடியாமல் இருக்கிறதற்கு காரணம் ஒரு மனம் இல்லை. அதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் இந்தப் பூவையும் பிஞ்சையும் கெடுத்துப் போடுகின்ற குழி நரிகள், சிறுநரிகள். ஒவ்வொரு ஊழியர் களைப்பற்றியும் தவறான கருத்துக்களை பூக்களிற்குள்ளும், பிஞ்சுகளிற்குள்ளும் போட்டதினாலே அவர்களிற்குள்ளே ஒருமன மற்ற தன்மை காணப்படுகின்றது.

குழி நரி எப்போதும் தோட்டத் திற்கு கீழே தான் இருக்கும். அது குழியைத் தோண்டி பத்திரமாய் பதுங்கி இருக்கும். போதகர் இல்லாத நேரம், காவல்காரர் இல்லாத நேரம் பார்த்து மெதுவாய் வெளியே வந்து பூவையும், பிஞ்சையும் கெடுத்துப் போடும். அல்லது அந்த மரத்தினுடைய வேரை அறுத்துவிடும். குள்ளநரி எப்போதும் எங்களோடு கூட இருக்கும். சிலவேளை பேதுருவுக்குள்ளே சாத்தான் புகுந்து கொண்டது போல எங்களுக்குள்ளேயும் புகுந்து கொள்ளலாம். எப்படியிருந்தாலும் அந்த குழிநரிகளையும் சிறுநரிகளையும் நாங்கள் பிடித்துக் கொள்ள வேண்டும். சபைக்கு எதிரான, சபையினுடைய

வளர்ச்சிக்கு எதிரான, தேவனுடைய வார்த்தைக்கு எதிரான, தேவனுடைய பிள்ளைக ளுக்கு எதிரான, எங்களுடைய ஊழியர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக் களை கொண்டு வருகின்றவர்களைக் குறித்து நாங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று ஆண்டவர் எங்களிடத் தில் எதிர்பார்க் கின்றார். நாங்கள் ஒவ்வொரு வரும் அப்படிப்பட்ட ஜாக்கிரதை உள்ள வர்களாய் மாறினால் குழி நரியினாலும், சிறுநரியினா லும் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் கர்த்தருக்காய் பலன் கொடுக்க முடியும்.

நாங்கள நெகேமியாவின் புஸ்தகத்தில் இருந்து **திருச்சபை எழுப்புதலடைய முடியாத படிக்கு தடை யாயிருக்கின்ற காரியம் என்ன?** என்பதனைக் குறித்து ஆராய்ந்து பார்க்கப்போகின்றோம். **நெகேமியா 2:10 இதை ஓரோனியனான சன்பல்லாத்தும் அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் கேட்டபோது, இஸ்ர வேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருந்தது.** அலங்கம் இடிக்கப்பட்டிருக்கின்றது, ஜனங்கள் மிகவும் கஸ்ரப்படுகிறார்கள் என்பதனைக் கண்ட வுடனே நெகேமியா உபவாசித்து ஜெபித்து அழுது தன்னுடைய வேலைக்கு ஓய்வெடுத்து அலங்கத்தைக்கட்டும்படியாய் ராஜாவினு டைய அனுமதியோடு ஜனங் களை விசாரிக் கும்படியாய் வருகின்றான். அது தொபியா விற்கும், சன் பல்லாத்துக்கும் விசனமாயிருந் தது. இன்றைக் கும் திருச்சபை யை விசாரிக் கும்படியாய் கட்டும்படியாய் ஊழியர்கள் எழும்புகின்ற போது அனேகருககு விசனம். இவர்களே பிசாசினுடைய குழிநரிகளும், சிறுநரிகளும்.



**எபேசியர் 6:11 நீங்கள் பிசா சின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனு டைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.** தேவனுடைய ராஜ்யத்தை விசாரிக்கிறதற்கு ஆட்கள் எழும்புகின்ற போது விசனம் அடைகிறவர்கள் பிசாசிற் குரியவர்கள். இந்தப் பிசாசினுடைய தந்தி ரங்களோடு எதிர்த்து நிற்கத்தக்கதாய் தேவனுடைய பிள்ளைகளாகிய நாங்கள் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும். அப்படியென்றால் எங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். எங்களு டைய சிந்தையை, எங்களுடைய இருத யத்தை, எங்களுடைய சரீரத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். எனவே பிரியமானவர் களே சர்வாயுதவர்க் கத்தை தரித்த ஒரு எச்சரிக்கையுள்ள, பிசாசினுடைய தந்திரங் களை எதிர்த்து நிற்கத்தக்க விசுவாசிக ளாய இருக்க வேண்டும் என்று ஆண்டவர் உங்களிடம் எதிர்பார்க்கின்றார். நீங்கள் சர்வாயுதவர்க்கத்தில் ஒன்றை கீழே வைப் பீர்கள் என்றால் உங்களுடைய சரீரத்திலே எங்கேயோ ஒரு இடத்திலே அது உங்களைத் தாக்கிவிடும். ஆகையினாலே தான் ஆண்ட வர் அந்த சர்வாயுதவர்க்கத்தை முழுமையாய் அணிந்து கொள்ளும்படியாய் சொல்லுகின் றார். அவ்வப்போது தாக்குதல் செய்வதற்கு இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய வேதவார்த்தையிலும் நிலைத்திருங்கள் என்று ஆண்டவர் சொல்லுகின்றார். எனவே எழுப்புதலின் காலத்திலே வாழ் கின்ற நாங்கள் எச்சரிக்கையுள்ளவர்க ளாய் எங்களைக் காத்துக் கொள்வதோடு மாத்திரம் அல்லாமல் மற்றவர்களையும் காத்துக்கொள்ளத்தக்க போர் வீரர்களாக நாங்கள் இருக்க வேண்டுமென்று ஆண் டவர் எங்கள் ஒவ்வொரு வரிடத்திலும் எதிர்பார்க்கின்றார்.

இங்கு நெகேமியாவை ஒரு சபையின் போதகர் என்றும், அந்த **அலங்கம் கட்டும்பணியில் ஈடுபட்ட இஸ்ர வேல் மக்களை ஒரு சபையாக வும் எடுத்து, அந்த அலங்கம் கட்டுகின்ற பணியை சபை** கட்டுகின்ற பணியாய் எழுப்புதலின்

பணிக்கு அடையாளமாய் நடைமுறை ரீதியாக சிந்தித்துப்பார்க் கின்ற போது நிச்சயமாய் இது நமக்கு உதவி செய்யும் என்று நம்புகின்றேன்.

ஒரு உண்மையான ஊழியக் காரன், உண்மையாய் சபையை விசாரிக் கின்ற பொழுது, யாராவது விசனமடைந்து உங்களிடத்திலே வந்து சொன்னால் அவர்களைக் குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள். அவர்கள் பிசாசினுடைய கைக் கூலி கள். அல்லது பிசாசினாலே வஞ்சிக்கப் பட்ட வர்கள் கல்வாரிச் சிலுவைக்கு இயேசு போகவேண்டும் என்பது தேவனுடைய திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற் றக்கூடாது என்று யார் மூலமாய் பிசாசு வெளிப்படுத்தினான்? பேதுரு மூலமாய்: நீர் சாகக்கூடாது, அதற்கு நான் விடமாட் டேன் என்று வெளிப்படுத்தி னான். நமது பார்வையில் இது நல்ல உண்மையுள்ள வைராக்கியமான பதில். ஆனால் ஆண்ட வர் சொன்னார் அப்பாலே போ சாத்தானே, அவனுக்குள்ளே பிசாசு இருந்தான். அந்த தேவ திட்டத்தை தடைபண்ணும் படியாய் அவனை ஒரு கருவியாக பயன் படுத்துகின் றான். ஆகையினாலே அவனுக்குள்ளே இருந்த பிசாசை ஆண்டவர் அதட்டி அவனைக் காப்பாற்றினார். அவனிடத்தி லேயே சபையைக் கட்டுகின்ற பொறுப்பை ஆண்டவர் கொடுத்தார்.

எனவே பிரியமானவர்களே, இன்றைக்கு யாரென்றாலும் தேவராஜ்ஜிய பணிக்கு எதிராய் உண்மையான ஊழியர் களுக்கு எதிராய் வந்து உங்களி டத்திலே விசனமான வார்த்தைகளைச் சொன்னால் தேவதிட்டத்திற்கு எதிரான வார்த்தை களைச் சொன்னால் அவர்களுக்குள்ளே இருக்கிற பிசாசை இனங்கண்டு அதட்டி அதனைப் பிடித்துப் போடும்படியாய் நீங்கள் ஜாக்கிரதை யாய் இருக்க வேண் டும். எனவே இப்பொ ழுது போதகர் (நெகே மியா) வந்துவிட்டார், அந்தச் சபையை (அலங்கத்தை) பொறுப்பெடுத்துவிட்டார். சபைக்கட்டுமாணப்பணிக்காய் அவர் செயற்பட ஆரம்பித்து விட்டார். அப்பொழுது பிசாசானவன் தன் ஆயுதங்களை பயன் படுத்துகிறான். அவன் பயன்படுத்திய ஆயுதங்களை ஆராய்ந்து பார்ப்போம்

## 1வது ஆயுதம் பரியாசம்.

**நெகேமியா 2:18-19 என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்னவார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன்: அப்பொழுது அவர்கள் எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங் கள் கைகளைத் திடப்படுத்தினார்கள். ஒரோ னியனான சன்பல்லாத்தும், அம்மோனிய னான தொபியா என்னும் ஊழியக்கார னும், அரபியனான கேஷேமும் இதைக் கேட்ட போது எங்களைப்பரியாசம் பண்ணி, எங்களை நிந்தித்து: நீங்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம் பண்ணப்போகிறீர் களோ என்றார்கள்.** அந்த வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்: போதகர் (நெகேமியா) வந்தவுடன் நல்ல வரவேற்பு. அருமையான போதகர் வந்து விட்டார். முழு அதிகாரத்தோடு வந் திருக்கின் றார். வல்லமையாய் ஆண்டவரால் பயன் படுத்தப்படுகின்றார் என்பதனை விசுவாசி கள் கண்டபோது அவர்கள் கரங்களைத் திடப்படுத்தினார்கள்.

பிரியமானவர்களே நல்ல விசு **வாசிகளுடைய பண்பு என்னவென்றால் தங்களுடைய ஆவிக்குரிய தலைவனின் கரங்களைப் பலப்படுத்துவதேயாகும்.** மாறாக நெகிழ்ந்து போகவிடுவது அல்ல. நீங்கள் நல்ல விசுவாசிகள் என்றால் உங்களுடைய போதகருடைய கரங்க ளைத் திடப்படுத்தி நல்ல வேலையைச் செய்வோம் வாருங்கள் என்று பெலப்படுத்த வேண்டும். மாறாக போதகரிடம் கேள்விகள் கேட்டு நீங்கள் எப்படி அதனைச் செய்ய முடியும்? அது பிழை, இது தவறு, இப்படி பிரசங்கிக் கூடாது, அவருக்கு இப்படிச் செய்தீர்கள் எனவே எனக்கு இப்படிச் செய்யுங்கள் என்று அவரை மனமுடையப் பண்ணுகிறவர்களாய் இருக்க கூடாது.

**காரியங்களை உடைத்துப் போடுகின்ற செயற்பாடு பிசாசினு டையது. அதனைத் திடப்படுத்தும் செயற்பாடு எல்லாம் தேவனுடையது.** யார் பிசாசினுடையவர்கள், யார் தேவனு டையவர்கள் என்பதனை இனங்கண்டு கொள்வதற்கு இது சிறந்த வழி. யாரெல் லாம் சபைத்தலைவனுடைய கரத்தை திடப்படுத்துகின்றார்களோ அவர்கள் தேவ னுக்குரியவர்கள். யாரெல்லாம் சபைத் தலைவனுடைய கரத்தைப் பெலப்படுத் தாமல் பெலவீனமடையச் செய்கின்றார் களோ அவர்கள் பிசாசிற்கு உரியவர்கள். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையிலே யாராவது வந்து சொல்லுகின்ற வார்த்தை களும், ஆலோசனைகளும் தலைவரோடு சேர்ந்து நிற்கப்பண்ணி னால் அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். மாறாக அது உங்களை பின்வாங்கச்செய் யக் கூடிய வார்த்தையாய் இருந்தால் இனங்கண்டு கொள்ளுங்கள் அது பிசாசினு டைய வார்த்தைகள்.

ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும், அரபியனான கேஷேமும் இதைக்கேட்ட போது, எங்களைப் பரியாசம் பண்ணினார்கள். இந்த தொபியாவைக்குறித் துச் சொல்லுகின்ற இடத்திலே, ஊழியக் காரன் என்ற பதம் பாவிக்கப்பட்டுள்ளது. எனவே இவன் ஆசாரிய ஊழியத்துவத் தில் ஏதோ ஒரு வகையில் உதவி செய்யத் தக்கதாய் ஒட்டிக்கொண்ட அம்மோனிய னாக காணப்படுகின்றான். இவனுக்கு தேவனுடைய அழைப்பு இல்லை. தேவனு டைய தெரிந்து கொள்ளுதல் இல்லை. ஏதோ ஒரு காரணத்திற்காக ஒட்டிக் கொண்டு விட்டான். ஆகையினாலே அவனும் அந்த ஊழியக்காரப்பட் டியலிற்குள் வந்துவிட்டான். இவர்கள் என்ன செய்கின்றார்கள்? **பரியாசம் பண்ணுகின்றார்கள்.**

இன்றைக்கு நாங்கள் தேவனை அறியாமல் இருந்த பொழுது எங்களை ஒருவரும் பரியாசம் பண்ணி இருக்க மாட்டார்கள். ஆனால் நாங்கள் தேவனை அறிந்து எங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு தேவனுடைய பிள்ளை களாக மாறியவுடனே முதலாவது எங்க ளுக்கு வந்த பிரச்சினை என்ன தெரியுமா? பரியாசம். இது தான் பிசாசு பயன் படுத்துகின்ற முதலாவது ஆயுதம். அதே போல திருச்சபை எழுப்புதல் அடைய முடியாதபடிக்கு, சபைத்தலைவர்கள் மும்முரமாய் தேவனுடைய ராஜ்ஜி யப்பணியில் செயற்படமுடியாதபடிக்கு அங்கே பிசாசு பயன்படுத்துகின்ற ஒரு ஆயுதமும் பரியாசம். தேவபணியை யும் ஊழியர்களையும் திடப்படுத்துவது தான் விசுவாசியின் கடமை.

இந்த அம்மோனியன் யார் தெரியுமா? ஆபிரகாமை ஆண்டவர் அழைத்த பொழுது ஆபிரகாமுடன் ஒட்டிக்கொண்டு வந்த லோத்துவின் வழியாய் வந்த சந்ததி. இந்த லோத்து வினுடைய சுபாவமே ஒட்டிக்கொண்டு வந்து ஆசீர்வாதத்தைத் தடைபண்ணு வது. ஆபிரகாமோடு லோத்து இருக்கும் வரைக்கும் ஆண்டவர் ஆபிரகாமை ஆசீர்வதிக்கவில்லை. எப்பொழுது லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்தானோ, அப்பொழுது தான் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைக் குறித்த உன்ன தமான வாக்குத்தத்தத்தைப் பெற்றான்

அதே போல இங்கே நெகேமியா அலங்கத்தைக் கட்டும்படியாய் வந்த போது தொபியாவும் தேவஜனத்தோடு ஒட்டிக்கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத் திற்கு தடையாக இருக்கின்றான். பரியாசம் பண்ணுகின்றான். பிரியமான வர்களே, **உங்களோடு இருந்து யாராவது ஊழியர்க ளைப் பரியாசம் பண்ணுகிறார் கள் என்றால் ஜாக்கிரதை. அவர்கள் பிசாசிற்கு உரியவர்கள். உங்களுடைய வாழ்க்கை யிலே இருக்கும் பூவையும் பிஞ்சையும் கெடுத்துப் போடும்படியாய் வந்த குழி நரிகள், சிறுநரிகள்.**

சிலவேளை இது எமக்குத் துக்கமாக இருக்கும். ஏனெனில் அந்த நபர் தான் எனக்கு அதிக நன்மைகளைச்

செய்கின்றார். அனேக காரியங்க ளைச் செய்கின்றார். எனது வீட்டிற்கு அடிக்கடி வந்து என்னை விசாரிப்பார். ஆனால் போதகர் என்றால் எப்போதாவது ஒரு தடவை வந்து என்னை விசாரித்து விட்டுச் செல்வார். ஆகவே போதகரை விட அந்த நபருக்குத்தான் என்னில் கரிசனை அதிகம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவர்கள் உங்கள் சபைத்தலைவர்களைப் பரியா சம பண்ணுகிறார்கள் என்றால் அவர்கள தான் சிறுநரிகள், குழிநரிகள். அவர்களை விட்டுவிலக வேண்டும்.

## 2வது ஆயுதம் கோபம்

**நெகேமியா 4:1-3 நாங்கள் அலங்கத்தைக் கட்டுகின்ற செய்தியைச் சன்பலலாத் கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சலடைந்து, யூதரைச் சக்கந்தம் பண்ணி: அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒரு நாளிலே முடித்துப் போடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ, என்று தன் சகோதரருக்கும் சமாரியாவின் சேனைக்கும் முன்பாக சொன்னான். அப்பொழுது அம்மோனியனான தொபியா அவன் பக்கத்தில் நின்று: அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்து போகும் என்றான்.** அவர்கள் அலங்கத்தைக் கட்டுகின்ற செய்தியை கேட்டபோது இவர்களுக்கு கோபம் வந்து விட்டது. தாங்கள் பரியாசம பண்ணியும் இவர்கள் அலங்கத்தைக் கட்டுகிறார்கள் என்பதனை சன்பல்லாத் கேள்விப்பட்ட போது அவனுக்கு பயங்கரக்கோபம் வருகின்றது.

**இன்றைக்கு ஊழியர்களுடைய செயற்பாட்டைக் கண்டு அதைக் குறித்து உங்களுக்கு கோபம் உண்டாகின்றதா? அப்படியானால் பிசாசிற்கு இடங்கொடுக்கின்றீர்கள் ஜாக்கிரதை.** குழி நரி, சிறுநரி தோட்டத்தைக் கெடுத்துப்போடும். இன்றைக்கு கோபத்தை வெளிப்படுத்தி தேவராஜ்ஜியப் பணியைத் தடைசெய்ய பிசாசானவன் முற்படுகின்றான். நாங்கள் இப்படி நடந்தால் விசுவாசிகள் கோபித்து விடுவார்களோ, அல்லது எமது சபையை விட்டு வேறு சபைகளிற்குச் சென்றுவிடுவார்களோ என்று பயப்படத்தக்கதான நிலையை பிசாசானவன் செயற்படுத்துகின்றான். அதற்கு இடம் கொடுக்காதீர்கள். பூவும் பிஞ்சும் கெட்டுப்போய்விடும். உங்களுடைய வாழ்க்கையிலே கோபம் வரக்கூடாது.

வேதாகமம் சொல்லுகின்றது: **தண்டனையின் பிரம்பு பிள்ளையினுடைய மனதிலே ஒட்டியிருக்கும் மதியீனத்தை அகற்றும்.** அந்தக் கோபத்தைக் குறித்து நான் பேசவில்லை. அளவுக்கு மிஞ்சி தேவராஜ்ஜியப் பணியைத் தடைசெய்யத் தக்கவிதமாய், தேவ வார்த்தைக்கு எதிரான கோபங்கள், தேவனுடைய ஊழியர்களுக்கு எதிரான கோபங்கள் எங்களுடைய வாழ்க்கையிலே வரக்கூடாது.

நெகேமியா தேவனுடைய ராஜ்ஜியப்பணியை மேற்கொள்ளும் போது முதலாவது அவனுக்கு வந்த பிரச்சினை பரியாசம், கேலி செய்தார்கள். அதனை அவன் மேற்கொண்ட போது அவன் மீது கோபப்பட்டார்கள். கோபப்பட்டு அதனைத் தடைசெய்யப்பார்த்தார்கள். இன்றும் சபைத் தலைவர்கள் மற்றும் சபை நடவடிக்கைகள் குறித்து கோபத்துடன் செயல்படுவதும் தேவன் விரும்பாதகாரியம் ஆகும். சபையின் வளர்ச்சி மற்றும் நடவடிக்கைகள் முன்னேறிச் செல்லும் போது நாம் கோபப்படாமல் ஒத்தாசை கொடுக்க வேண்டும். கர்த்தர் தன் திட்டங்களை நிறைவேற்றுகின்றார் என தேவனை மகிமைப்படுத்த வேண்டும். மாறாக கோபப்பட்டு எதிரான செயற்பாடுகளில் இறங்கினால சிறுநரி, குழிநரியாக மாறி விடுவோம். கோபத்துடன் செயல்படுபவர்கள் குறித் தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**3வது ஆயுதம் யுத்தம்**

**நெகேமியா 4:7-8 எருசலே மின அலங்கத்தைக் கட்டுகின்ற வேலை வளர்ந்தேறுகிறது என்றும், இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டு வருகிறது என்றும் சன்பல்லாத்தும், தொபியாவும், அரபிய ரும், அம்மோனியரும், அஸ்தோத்திய ரும் கேட்ட போது அவர்கள் மிகவும் எரிச்சலாகி, எருசலேமின் மேல் யுத்தம் பண்ண எல்லாரும் ஏகமாய் வரவும், வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடு பண் ணினார்கள்.** சபை வளர்ந்து வருகின் றது. எனவே சபைக்கு எதிராய் பல குற்றச் சாட்டுக்கள் போட்டு பலவிதமான இடை யூறுகளை செய்து பரியாசம்பண்ணி, கோபப்பட்டுப் பார்த்தும் பலனில்லை. எனவே அது யுத்தத்திற்கான ஒரு வழியைக் கொண்டு வந்தது.

பிரியமானவர்களே இரண்டு நபர்களுக்கு இடையில் நடைபெறுவது சண்டை. ஆனால் இங்கே யுத்தம் என்கின்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. யுத்தம் என்பது இரண்டு நாடுகளிற்கு இடையில் நடைபெறுவதாகும். எனவே இந்தச் சன்பல்லாத்தும் தொபியாவும் யுததம்பண்ண எத்தனித்தார்கள். ஆகவே அவர்கள் இன்னொரு இராஜ்ஜியத் திற்கு உரியவர்கள் என்பது மிகத்தெளி வாகத் தெரிகின்றது. தேவனுடைய ராஜ ஜியத்திற் கும் தேவனுடைய பிள்ளைகளுக்கும் விரோதமாய் யுத்தம் பண்ண கட்டுப்பாடு பண்ணினார்கள்.

**வேதவார்த்தையின் அடிப் படையில் பார்க்கும் போது: எமக்கு மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யுத்தம் அல்ல. அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலத்தில் உள்ள பொல்லாத ஆவிகளோடும் எமக்கு போராட்டம் உண்டு.** எனவே உண்மையான ஒரு தேவனுடைய பிள்ளையை, சபையை எதிர்த்து நிற்கத்தக்க, யுத்தம் செய்யத்தக் கவர்கள் யாரென்றால் அது பிசாசும் பிசாசின் இராஜியத்திற்குரியவர்களும் தான். இன்றைக்கு யாராவது தேவனு டைய ராஜ்ஜியத்திற்கு எதிராய் யுத்த தோரணையில் வருகின்றார்கள் என்றால் அது எடுத்துக் காண்பிக்கின்ற உண்மை யான செய்தி என்னவென்றால் அவர்கள் பிசாசினுடைய ராஜ்ஜி யத்திற்குரியவர்கள் என்பதே.

எனவே இந்த சன்பல்லாத்து என்ன செய்கின்றான்? அவன் தேவனுடைய சபையோடும் தேவனுடைய பிள்ளை களோடும் யுத்தம்பண்ணுவதற்காய் தனக்கென்று ஒரு கூட்டத்தை உருவாக்கி கட்டுப்பாடு பண்ணுகின்றான். அதன் பிரதிபலிப்புத்தான் இன்றைக்கு இலங்கை யிலும் சரி உலகத்திலும் சரி வெளிப்படையாக காணப்படுகின்றது. ஊழியர்களுக்கு எதிராய் யுத்தக்கொடி பிடித்து இன்னும் ஒரு ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பது. நீங்கள் 75% யுத்தங்களைப் பார்ப்பீர்கள் என்றால் அதன் முடிவிலே ஒரு ராஜ்ஜியம், ஒரு நாடு ஸ்தாபிக்கப்பட்டதை காணலாம். அதே போல ஆவிக்குரிய ரீதியாக பார்க்கின்ற போது அந்தகாரத்தின் லோகாதிபதி யாகிய பிசாசோடு சேர்ந்து யுத்தம்பண்ணும் படியாய் தங்களை அர்ப்பணித்தவர்கள்புதிய புதிய சபைகளை உருவாக்குவார்கள். சுவி சேஷம் அறிவிக்கப்படாத ஆத்துமாக்கள் நிறைந்த இடத்தில், சபைகள் இல்லாத இடத்தில் தரிசனத்தோடு போய் உண்மை யாய் ஊழியத்தை ஆரம்பிப்பவர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. சிலர் தங்களுடைய போதகரோடு சண்டையிட்டு, ஏதோ ஒரு குற்றச்சாட்டை வைத்து ஒரு பெரிய யுத்தத்தையே உருவாக்குவார்கள். யுத்த சூழ்நிலையை உருவாக்கி பிரிவினையைக் கொண்டு வருவது பிசாசினுடைய நோக்கம். தேவனுடைய ராஜ்ஜியப்பணியைத் தடை செய்வது தான் பிசாசினுடைய நோக்கம்.

**ஆனால் எந்த ராஜ்ஜியமும் தேவனுடைய ராஜ்ஜியத்தை மேற்கொள்ள முடியாது.** பிசாசிற்கு சபையின் மேல் அதிகாரம் இல்லை. **சபை கர்த்தருடையது.** அதனை ஜெயமாக்கிக் கொண்டவர் நம்மு டைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. நாங்கள் சபையின் தலைவர்களுக்கு எதிராய் யுத்தம்

பண்ண எத்தனிக்கின்ற பொழுது பிசாசின் ராஜ்ஜியத்திற்குட்பட்டு சபையின் ஸ்தாபரா கிய, தலைவராகிய இயேசுவுக்கு எதிராக யுத்தக் கொடி பிடிக்கின்றோம் என்பதனை மறந்து போகக்கூடாது. சபைக்கும் எங் களுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அந்தப் போதகருக்கும் எனக்கும் தான் பிரச்சினை என்று எழுந்து யுத்தம் பண்ண முற்படுவீர்களாக இருந்தால் நீங்கள் போதகருக்கு எதிராக அல்ல சபையைக் கட்டிய, சபையின் தலைவராகிய இயேசுகிறிஸ்து விற்கு எதிராகவே யுத்தம் செய்கின்றீர்கள். பிசாசு யுத்தம் என்கின்ற ஆயுதத்தைக் கொண்டு வந்தான். ஆனால் அதுவும் (போதகராகிய) நெகேமியை வையும், (விசுவாசிகளாகிய) இஸ்ரவேல் மக்களையும்ஒன்றும்செய்ய முடியவில்லை.

**நெகேமியா 4:9 ஆனாலும் நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர் களை வைத்தோம்.** அப்படிப்பட்ட எதிர்ப் பானவர்கள், சபையை உடைத்துப் போடு கிறவர்கள், சபையைப் பிரித்துப் போடுகிற வர்கள், எழுப்புதலைத் தடை பண்ணுகிற வர்கள் இருப்பதினாலே நெகேமியா (போதகர்) இரவும் பகலும் ஜாமங்காக்கிற வர்களை வைத்தான். அந்த வேலை தடைபடாதபடிக்கு, சபைக் கட்டுமானப்பணி கள் தடைபடாதபடிக்கு காவற்காரரை ஏற்படுத் தினார். ஒரு கூட்டம் வேலை செய்தது, ஒரு கூட்டம் காவல் காத்தது. **இன்றைக்கும் சபைக்காய் முழந்தாழ்படியிட்டு ஜெபிக்கின்ற ஜனங்கள் சபைக்குத் தேவை.** சபையை விமர்சித்து, சபையின் காரியங்களையும், ஊழியங்களையும், ஊழியர்களையும் விமர்சிக்கிறவர்கள் சபைக்குத் தேவை யில்லை. சபைக்குத் தேவை சபையின் போராட்டமான காலங்களில் சபைக்காக முழந்தாழ படியிட்டு பரிந்து மன்றாடுகின்ற, சபையைப் பிசாசின் திட்டத்தில் இருந்து காக்கின்ற, சபைக்குள் இருக்கின்ற குழி நரிகள், சிறுநரிகள் என்பனவற்றைப் பிடித்து அப்புறப்படுத்தத்தக்க ஜெபவீரர்கள் தேவையாக இருக்கின்றார்கள்.

இன்றைக்கு ஊழியர்களைத் தாக்கி ஊழியங்களைத் தடைபண்ணு வது பிசாசினுடைய வேலை. ஒன்றில் அவர்களை பாவம் செய்யத்தூண்டுவான் அல்லது அவர்களை விபத்தில் சிக்கவைத்து காயமடையப்பண்ணியோ உயிரிழக்கப் பண்ணியோ காரியங்களைச் செய்வான். ஏதோ ஒரு காரியத்தைக் கொண்டு வந்து அவர்கள் மும்முரமாய் ஊழியத்திலே ஈடு படமுடியாமல் தடை பண்ணுவது தான் பிசாசினுடைய நோக்கம்.

விசுவாசிகளாகிய நாங்கள் எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை, எங்களுக்கு ஊழியத்தில் பங்குமில்லை, பாகமுமில்லை என்று சொல்லி ஒதுங்கி நிற்காமல் அப்படிப்பட்ட ஊழியர்களை முழந்தாளில் நின்று ஜெபத்திலே தாங்கு கிறவர்களாய் மாறுகின்ற பொழுது பூவும் பிஞ்சுமாய் இருக்கின்ற எங்கள் தோட்டம் அதிக பயனுள்ளதாய் அதிக பலன் கொடுக் கத்தக்கதாய் தேவன் கிரியை செய்வார். தேவன் பெரிய காரியங்களைச் செய்வார். **சபையைக் காக்கும்படியாய், சபையிலே எழுப்புதல் உண்டாகும் படியாய், ஊழியர் களைக் காக்கும்படி யாய் அவர்களுக்காக ஜெபத்திலே தாங்குகின்ற ஜெபவீரர்கள் இன்றைக்கு சபைக்குத் தேவையாக இருககின்றார்கள்.** அப்படிப்பட்ட காவற் காரரை நெகேமியா நிறுத்தினான். அவர்கள் அந்தக் காவலிலே உண்மையாய் நின்றார் கள். மாத்திரமல்ல வேலையைச் செய்த வர்கள் ஒரு கையில் ஆயுதமும் மறுகை யிலே வேலையுமாய் காணப் படடார்கள். ஒரு கையிலே பட்டயத்தோடு அவர்கள் நின்றார்கள். ஏனென்றால் இந்தக் காவல் காரரை மீறி வருகின்ற ஆபத்துக்களை எதிர்கொள்ளத்தக்க தாய் அவர்கள் ஆயத்த முள்ளவர்களாய் இருந்தார்கள்.

எனவே பிரியமானவர்களே, **நாங்கள் தேவவார்த்தையினாலே நிரப் பப்பட்டவர்களாய் எப்படிப்பட்ட பிரச்சினை கள் வந்தாலும் அதை எதிர்கொள்ளத் தக்கதாய் எப்பொழுதும் தேவனோடு நடக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.**

எப்பொழுதும் தேவனோடு இசைந்தவர்களாயிருக்க வேண்டும். அதனையே ஆண்டவர் எதிர்பார்க்கின்றார். அதனாலே தான் யுத்தம் என்கின்ற அந்த பொல்லாத ஆயுதத்தை மேற்கொள்ள முடியும். நாங்கள் தேவனோடு ஆயத்தமுள்ளவர்களாய் இருப்போம். அத்தோடு எங்களுடைய சபையை ஜெபத்திலே தாங்குவோம். ஜெபத்தினாலே மேற்கொள்ளுங்கள். வேதனை, பிரச்சினை, தாக்கம் வருகின்ற பொழுது முழந்தாளில் நின்று சபையின் காரியங்களுக்காக ஜெபித்துப் பாருங்கள் உங்களுடைய வாழ்க்கையிலே தேவன் பெரிய காரியங்களைச் செய்வார்.

## 4வது ஆயுதம் சமரசம்

அடுத்ததாக பிசாசானவன் ஒரு திட்டத்தை தீட்டுகின்றான்: **நெகேமியா 6:1-9** இப்பொழுது அந்தக் குள்ளநரி சாத்தான் குள்ளமான ஒரு காரியத்தைச் செய்கின்றான. **தூதனுப்புகின்றான்.** வாரும் இந்த இடத்திற்குப்போய் பேசித்தீர்ப்போம். அலங்கத்தைக் கட்டுகின்ற நெகேமியாவுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு செய்தி வருகின்றது: **நமக்கு ஏன் பிரச்சினை?** இதனை யார் சொல்லுகிறார்கள்? இந்தக் குழிநரிகளும், சிறுநரிகளும், பிரச்சினையை எடுத்ததே இவர்கள் தான். இப்போது பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றார்கள். பிரியமானவர்களே, **தேவராஜ்ஜியப்பணியிலே ஈடுபடுகிறவர்களுக்கு எதிராய் செயற்படுகிறவர்களோடு தேவ ஊழியர்களுக்கு எந்தவிதமான பேச்சுவார்த்தையும் கிடையாது.** நெகேமியா இதற்கு ஒரு நல்ல உதாரணம். நெகேமியா அவர்களுடைய சதியை இனங்கண்டு கொண்டு நான் வரமாட்டேன் என்று மூன்று தடவைகள் அழைத்தும் திடமாய் சொல்லுகின்றான். இன்றும் தேவராஜ்ஜியப்பணிக்கு எதிராய் செயற்படுகிறவர்களுடன் பேசித் தீர்க்க வேண்டும் என்ற காரியம் அனேகருக்குள்ளே இருக்கின்றது. சபைக்கு எதிராய் செயற்படுகின்றவர்களோடு போதகர் பேசித்தீர்த்திருக்கலாம். அதைத் தான் அன்று சன்பல்லாத்தும் தொபியாவும் சொன்னார்கள் வாரும் பேசித்தீர்ப்போம்.

**சபைக்கு எதிராய் செயற்படுகிறவர்களுடன் பேசித்தீர்க்கும்படியாய் போனால் சபை தவறான முடிவுகளை எடுக்க வேண்டி வரும்.** ஆகையினாலே தான் ஆண்டவர் நெகேமியாவைக் கொண்டு ஒரு எச்சரிப்பைக் கொடுக்கின்றார். ***சபைக்கு எதிராய் செயல்படுகிறவர்களோடு பேச்சுவார்த்தை கிடையாது தேவஊழியர்களது வேலை சபையைக் கட்டுவதேயொழிய தேவையற்றவர்களோடு பேசி நேரத்தைக் வீணடிப்பது அல்ல.*** சன்பல்லாத்து, தொபியா ஆகியோரின் உண்மையான நோக்கம்நெகேமியாவை தனிமையான இடத்திற்கு கொண்டு சென்று ஆளை கொலை செய்வதாகும்.

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, தேவவார்த்தைக்கு எதிரானவர்களுடன் சமரசம் செய்வது தேவனுக்கேற்றது அல்ல. எனவே தேவதிட்டத்துடன் இணைந்து செயற்படுவோம்.

## 5வதுஆயுதம்

## கள்ளத்தீர்க்கதரிசனம்

**நெகேமியா 6:10-13** இங்கே நாங்கள் பார்க்கிறோம் நெகேமியா ஒருவனை சந்திக்கப் போகிறான். நிச்சயமாய் அவன் ஒரு தீர்க்கதரிசி. சன்பல்லாத்து, தொபியாவினுடைய கைக்கூலியாள் என்று தெரிந்திருந்தால் நெகேமியா நிச்சயம் அவனைப் பார்க்கப்போயிருக்க மாட்டான். ஆனால்நெகேமியா அங்கே சென்ற பொழுது அவன் ஏற்கனவே சன்பல்லாத்து, தொபியாவினுடைய கைக்கூலிக்கு மயங்கினவனாகிவிட்டான். கிட்டத்தட்ட பீலேயாம் மாதிரி. அவன் என்ன சொல்லுகிறான்: இந்த இராத்திரியிலே அவர்கள் வந்து உம்மைக் கொன்று போடுவார்கள். ஆகையினாலே வாரும், நானும் நீரும் ஆலயத்திற்குள்ளே போய் கதவைப்பூட்டி பத்திரமாய் இருப்போம் என்றான். சன்பல்லாத்தும், தொபியாவும் யாருக்கு எதிராய் நின்றார்கள்? அவர்கள் நெகேமியாவிற்கு எதிராய்

நிலற்றார்கள். ஆனால் இவன் சொல்லுகின் றான் உம்மைக் கொன்றுபோடவரு வார்கள், எனவே நானும் நீரும் ஒழித்துக் கொள்ளுவோம். **தவறான தீர்க்கதரி சனங்கள் மூலம் தவறான பாதைக்கு இட்டுச்செல்வது பிசாசினுடைய நோக்கம்.**

பரியமானவர்களே, உண்மையான தீர்க்கதரிசனங்கள் எங்களுக்குத் தேவை தான். அது அவசியமும் கூட. ஆனால் இன்றைக்கு அனேகர் தங்கள் பக்கம் ஒரு கூட்டம் வரவேண்டுமென்பதற்காய் தவறாய் இப்படி பயன்படுத்துகின்றார்கள். தீர்க்கதரிசனங்களைக் கண்டு ஏமாற வேண்டாம். தீர்க்கதரிசனம் சபைக்கு அவசியம் தேவை. அப்படிப்பட்டவர்கள் இருப்பதினாலே தான் இன்றைக்கு கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி கள்ளத் தீர்க்க தரிசனங்களைச் சொல்லி தேவன் சொல்லாதவற்றை சொல்லி அனேகரை தங்கள் வசப்படுத்திக் கொள்கின்றார்கள். சுபைக்கு எதிரான தீர்க்கதரிசனங்களை கூறுகின்றார்கள். தங்களை மேன்மையா னவர்களாய் காண்பிப்பதற்காய் ஒரு வரிடம் கேள்விப் பட்ட காரியங்களை சிலர் தீர்க்கதரிசனமாய் சொல்லுகிறார்கள் ஜாக்கிரதை. உங்களைப் பாரத்து ஒரு தீர்க்கதரிசனத்தைச் சொன்னால அந்தத் தீர்க்கதரிசனவரத்தைவிட மேலான வரத்தை ஆண்டவர் எங்கள் எல்லோருக் கும் தந்திருக்கிறார். அதுதான் பகுத்தறி கின்ற வரம். ஆகையினாலே தான் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகின் றான்: **ஒருவன் தீர்க்கதரிசனம் உரைக்கின்ற பொழுது மற்றவர்கள் அதனை நிதானிக்கக் கடவர்கள்.** அது ஒரு பெரிய வரம். இது கர்த்தருடைய வார்த்தையா? அல்லது மனுஷீகத்தில் இருந்து உருவாகின்ற வார்த்தையா? அல்லது அவர் அறிந்த ஒன்றைச் சொல்லு கின்றாரா? என்பதனை நிதானிப்பது வரம். அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நெகேமியாவை ' அழிப்பது பிசாசினுடைய திட்டம். **தேவஊழியர்களை நிர்மூலமாக்குவது பிசாசினுடைய திட்டம். ஆனால் அவர்களைப் பாதுகாப்பது தேவனுடைய பெரிதான கிருபை.** தவறான தீர்க்கதரிசனத்தின் மூலம் உண்மையான தேவனுடைய தாசனை திசைதிருப்பப் பார்த்தான். ஆனால் அவன் எச்சரிக்கையா யிருந்தான். எனவே **எல்லாவற்றையும் சோதித்தறிந்து நலமானதைப் பற்றிக் கொள்ளுங்கள்** என்று வேதாகமம் சொல்லுகின்றது. எங்களைத் தவறாய் நடத்தக் கூடிய காரியங்களும் இருக்கின் றது ஜாக்கிரதை. இந்த ஆயுதமும் சரி வரவில்லை. இப்பொழுது பெரிதான ஒரு ஆயுதத்தைப் பயன்படுத்துகின்றான் பிசாசு.

## வேது ஆயுதம்
## சம்பந்தம் கலத்தல்

**நெகேமியா 13ஆம் அதிகாரம்.** நெகேமியா (போதகர்) இல்லாத சந்தர்ப்பத் திலே அங்கு உதவி ஊழியக்காரனாய் இருந்த ஒருவரோடு இந்த தொபியா சம்பந்தம் கலந்தான். வேத ஆய்வாளர்கள் சிலர் சொல்கிறார்கள்: திருமண சம்பந்தங் கலந்தான் என்பதாக. ஆகையினாலே தான் ஊழியனாகிய தொபியா என்று அனேக இடங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே சம்பந்தம் கலந்த தொபியாவை ஆலயத்திற்குள்ளேயே கொண்டுவந் தார்கள். அவனை ஆலயத்திலே காணிக் கைகள் வைக்கின்ற மிகமுக்கியமான அறைகளிலே ஒன்றில் குடியமர்த்தினார்கள்.

ஆனால் நெகேமியா (போதகர்) வந்து பார்க்கின்றான், சபைக்கு எதிராய் நின்றவன், சபையை தூற்றித்திரிந்தவன், சபையைப் பரியாசம் பண்ணியவன், கோபப்பட்டவன், யுத்தத்திற்கான ஆயத்தம் செய்தவன், தவறான தீர்க்கதரிசனங்க ளுக்கு காரணமாய் இருந்தவன், ஆலயத்திற் குள்ளேயே வந்துவிட்டான். வேதம் சொல்லு கின்றது, உன் சகோதரன் பாவம் செய்தால் அவனை ஏழு ஏழுபது தரம் மன்னிக்க வேண்டும் எனவே பாவம் அவன் இருந்து விட்டுப் போகட்டும் என்று நெகேமியா விடவில்லை. சிலவேளை அந்த உதவிப் போதகர் போய் சொல்லியிருப்பார், அவனைக் கர்த்தரே மன்னித்துவிட்டார், நீங்கள் எப்படி

மன்னிக்காமல் இருக்க முடியும்? இரண்டு திருமணம் செய்கிறவர்களுக்கும் ஊழியத்தை கொடுக்க வேண்டும். அவர்களும் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்று இன்றைக்கு அனேகர் சொல்லுகிறார்கள்.

பிரியமானவர்களே, தேவனுடைய சபை, தேவனாலே ஸ்தாபிக்கப்பட்ட சபைக்கு எதிராய் பேசுகிறவர்களோடு, செயற்படுகின்றவர்களோடு எங்களுக்கு எந்தவிதத்திலும் சம்பந்தக்கலக்க கூடாது என்பதனை நெகேமியா 13ஆம் அதிகாரத்திலே காணலாம். ஆலயத்திற்குள்ளே வந்த தொபியாவை கண்ட நெகேமியா அவனுக்கு மனந்திரும்ப சந்தர்ப்பம் கொடுக்காமல், மன்னிக்காமல் உடனே அவனுடைய தட்டுமுட்டுக்கள் எல்லாவற்றையும் தூக்கி வெளியே எறிந்து விட்டான். நெகேமியா எதற்கும் பயப்படவில்லை. தவறான சம்பந்தங்கள் எங்களுக்குள்ளே இருக்கக்கூடாது. தேவனுக்குப் பிரியமில்லாத சம்பந்தங்கள் எதுவுமே எங்கள் வாழ்க்கைக்குள் இருக்கக்கூடாது. அது திருமண வாழ்க்கையாக இருந்தாலும் சரி, நடைமுறை வாழ்க்கையாக இருந்தாலும் சரி, திருச்சபை சார்ந்த காரியங்களாக இருந்தாலும்சரி, தவறான சம்பந்தங்கள் காணப்படக்கூடாது. அவை தூக்கி எறியப்பட வேண்டும். அப்படியான உறவுகளை தூக்கி எறிந்து உங்கள் ஆத்துமாவைப்பாதுகாத்து பூவும், பிஞ்சுமாய் இருக்கிற உங்கள் திராட்சத் தோட்டங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

*அதன்பிற்பாடு பார்க்கின்ற போது அந்த அலங்கம் கட்டிமுடிந்தது. அது பெலன் கொண்டது. தேவநாமம் மகிமைப்படுத்தப் பட்டது. ஜனங்கள் நியாயப்பிரமாணத்தை வாசித்து அதனாலே தங்கள் வாழ்க்கையை சீர்படுத்தி தேவன் பக்கமாய் திரும்பினார்கள். அதே போல பிரியமானவர்களே, பிசாசு கொண்டு வருகின்ற காரியங்களை இனங்கண்டு பூவும் பிஞ்சுமாய இருக்கின்ற எங்கள் வாழ்க்கையை காத்து தேவன்சார்பிலே நின்று திருச்சபையின் எழுப்புதலுக்காக ஜெபிக்கிறவர்களாய் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து தீங்கான எல்லாக் காரியங்களையும் வெளியேற்றுவோம். அவருடைய வருகை சமீபமாய் இருக்கின்றது.*

**போதகர் எமில் ஜக்சன்**
**சூசைப்பிள்ளை**



**கடைசியாக என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல; துரைத்தனங்களோம், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. — எபேசியர் 6:10–12**

# குறுக்கெழுத்துப் போட்டி – 39
# சரியான பதில்கள்

*இடமிருந்து வலமாக*

01. ஆந்நறுள்ளவர்
04. ஏழைக்கு
08. அந்நாளில்

*மேலிருந்து கீழாக*

01. ஆறத்தில்
05. குழந்தை
03. அவரில்

*வலமிருந்து இடமாக*

02. வழி
09. இருள்
06. வரி

*கீழிருந்து மேலாக*

02. வரள (வளர)
05. குழி
07. பிழைபந்ந

குறிப்பு: குறுக்கெழுத்துப் போட்டி - 39ல் ஏற்பட்ட அச்சுத்தவறிற்காக மனம்வருந்துகின்றோம்.

# வினாவிடை – 41
# சரியான பதில்கள்

01. துக்கவீட்டில்
02. முப்பத்தாறு
03. ஆசனர்
04. இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும்
05. யோபு 6:5
06. கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன்.
07. இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும்.
08. வேசி
09. தமக்கு காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவிற்கும்
10. முகதுக்கத்தினாலே.

## வினாவிடை - 41 சரியான விடை எழுதியவர்கள்

01. தி.ஜெகா - மயிலங்காடு
02. பா.வதனி - காரைநகர்
03. ச.நாகேஸ்வரி - காரைநகர்
04. சி.கல்யாணி - காரைநகர்
05. த.சிவாஜினி - காரைநகர்
06. பா.டிலானி - காரைநகர்
07. பா.தர்சினி - காரைநகர்
08. ம.டயானி - பாண்டவெட்டை
09. பா.மோகனதாஸ் - காரைநகர்
10. பா.கோமதி - காரைநகர்
11. எம்.ரீகா - ஊர்காவற்றுறை
12. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
13. வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
14. ம.மாலதி - ஊர்காவற்றுறை
15. வி.சர்மிளா - ஊர்காவற்றுறை
16. சு.விதுசன் - அல்லாரை
17. து.துயானி - அல்லாரை
18. பொ.தயாளினி - காரைநகர்

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர் :-..........................................................

விலாசம் :-..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To:





**Zion Church Office,**

**No. 347, Navalar Road,**

**Jaffna, Srilanka.**

TO:

**MISS. MATHARA GNANACHCHANDRAN,**
**ALVAI EAST,**
**ALVAI,**
**MADATHTHADY.**